விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 08 புதன்கிழமை (25.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 301

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# தமிழர் தாயகப் பிரதேசத்தில் இன்று பூரண கதவடைப்புப் போராட்டம்

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அழைப்பு

(கொழும்பு)—

வடக்கு கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று வடக்கு, கிழக்கில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் பூரண கதவடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.இதற்கான அழைப்பை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்துள்ளனர். உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினால் பிரிக்கப்பட்ட வடக்கு -கிழக்கை உரிய முறையில் இணைக்கவேண்டும் எனக் கோரியும் ;

சர்வதேசத்தின் அழுத்தத்தினை அரசின் மீது ஏற்படுத்தும் வகையிலும் தமிழர் தாயகப் பிரதேசத்தில் இன்று பூரண கதவடைப்புப் போராட்டத்தை மேற்கொள்ளுமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)




கிளிநொச்சியிலிருந்து நேற்றுக் காலை கொழும்பு நோக்கிப் புறப்படத் தயாராக இருந்த விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள்...

## ஊடக சுதந்திர தரப்படுத்தலில் இலங்கை 141 ஆவது இடத்தில்

(கொழும்பு)

உலக ஊடக சுதந்திரம் தொடர்பான தரப்படுத்தலில் இலங்கை 141 ஆவது இடத்தில் உள்ளது. ரிப் [illegible]

இது தெரியவந்துள்ளது.

168 நாடுகள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே இலங்கை 141 ஆவது இடத் [illegible]

## விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழுவினர் இன்று அதிகாலை ஜெனீவா பயணம்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சில் கலந்துகொள்ளும் விடுதலைப் புலிகளின் [illegible]

வித்தன.

இன்று அதிகாலை 2 .15 மணியளவில் இவர்கள் புறப்பட்டதாக [illegible]

ஹெலிகொப்டர் மூலம் கொழும்பை வந்தடைந்தனர்.

நேற்றுக் காலை கட்டுநாயக்கா [illegible]

## ஊடக சுதந்திர தரப்படுத்தலில் இலங்கை 141 ஆவது இடத்தில்

(கொழும்பு)

உலக ஊடக சுதந்திரம் தொடர்பான தரப்படுத்தலில் இலங்கை 141 ஆவது இடத்தில் உள்ளது. ரிப்போட்டர்ஸ் வித்தவுட் போடஸ் என்ற சர்வதேச ஊடக சங்கம் இவ் ஆண்டு மேற்கொண்ட கருத்துக் கணிப்பில் இது தெரியவந்துள்ளது.

168 நாடுகள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே இலங்கை 141 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இக் கருத்துக் கணிப்பில் முதல் இடத்தை ஐந்து நாடுகள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழுவினர் இன்று அதிகாலை ஜெனீவா பயணம்

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சில் கலந்து கொள்ளும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் இன்று அதிகாலை கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டதாக விமான நிலையச் செய்திகள் தெரிவித்தன.

இன்று அதிகாலை 2 .15 மணியளவில் இவர்கள் புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. முன்னதாக நேற்றுக் காலை அக்குழுவினர் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் கொழும்பை வந்தடைந்தனர்.

நேற்றுக் காலை கட்டுநாயக்காவிலிருந்து இலங்கைக்கான நோர்வேத் தூதவர் ஹான்ஸ் பிறட்ஸ்கருடன் ஹெலி (04 ஆம் பக்கம் பார்க்க)

## 18 ஆயிரம் கிலோ பொருட்கள் விமானம் மூலம் யாழ்.வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பற்றாக் குறையாகக் காணப்படும் சில அத்தியாவசியப் பொருட்கள் விசேட விமானம் மூலம் எடுத்துவரப்பட்டதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

18 ஆயிரம் கிலோ நிறையுள்ள பொருட்களே எடுத்துவரப்பட்டதாக கூறப்பட்டது. இவற்றுள் சவர்க்காரம் ,நுளம்புத்திரி மற்றும் மருத்துவப் பொருட்கள் என்பவை எடுத்துவரப்பட்டதாக விமானப் படையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப் பொருட் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தைக் கண்காணிக்க உயர் மட்டக்குழு நியமனம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையே செய்து கொள்ளப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த உயர் மட்டக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பினையடுத்து அக் குழு நியமிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப் பேச்சில் நம்பிக்கையில்லை தலைவரின் பணிப்பிலேயே செல்கிறோம்

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பேச்சுக்களில் சிறிதளவேனும் நம்பிக்கையில்லை. சர்வதேச சமூகத்தின் அழைப்புக்கு மதிப்புக் கொடுத்து எமது தலைவர் இப் பேச்சிற்கு இணங்கியிருந்தார்.

அதன் அடிப்படையில் அவரின் பணிப்புக்கு அமையவே பேச்சுக்குச் செல்கிறோம் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஜெனீவாவுக்கு புறப்பட முன் கிளிநொச்சியில் வைத்து ஊடகவியலாளர்களுக்கு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

எங்களுடைய பேச்சுக்குழுவிற்கு முழுப்பாதுகாப்புடன் பயணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நோர்வே (04 ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சி-ஐ.தே.க.ஒப்பந்தத்துக்கு இணைத் தலைமைகள் வரவேற்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவை இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமையை இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் வரவேற்றுள்ளன.

அமெரிக்காவின் சார்பில் பேசவல்ல ஊடக அதிகாரி ஈவன் ஓவென்ஸ் கூறுகையில், இலங்கையின் (04 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
குருப்பெயர்ச்சி
(12 ராசிகளுக்குமான பலன்கள்
உங்கள் வலம்புரியில் தொடர்ந்து வரும்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# குருப் பெயர்ச்சி

## சிம்மம்

*மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்.*

நினைத்ததை வெற்றிகரமாக நிகழ்த்த கடுமையாக உழைக்கும் சிம்மராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் இருந்த குருபகவான் இப்போது 4ஆம் இடமான விருச்சிகராசியில் பெயர்ச்சி ஆகியுள்ளார். ராசிக்கு 8,10,12 ஆகிய இடங்களைதனது 5,7,9 ஆகிய பார்வையால் பார்க்கிறார். இதனால் வார்த்தைகளில் நிதானமும் அறிவுப் பூர்வமான சிந்தனையும் கலந்திருக்கும். அதிக பணவரவு பெறுவதற்கான புதிய வாய்ப்பு உருவாகும். சகோதரர்கள் சொந்த முயற்சியினால் வளம் நிறைந்த வாழ்க்கை வசதி கிடைக்கப்பெறுவார்கள். சமூக சேவைப் பணியில் ஈடுபடவும் நற்பெயர் பெறவும் கிடைக்கும் சூழ்நிலையை நன்கு பயன்படுத்துவீர்கள்.

வீடு, மனை, வாகன வகையில் கடந்த காலத்தில் இருந்த பின்னடைவு மாறி அபிவிருத்திபெறும் நன்னிலை உண்டு. தாயின் அன்பும் ஆசியும் பரிபூரணமாக கிடைக்கும். புத்திரர்கள் விளையாட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் படிப்பில் சிறந்து விளங்கிட தனிக்கவனம் செலுத்துவர். பூர்வ சொத்துக்களை பராமரிப்பதிலும் அபிவிருத்தி செய்வதிலும் பணத்தேவை அதிகரிக்கலாம். கவனமுடன் செயல்படுவதால் சிரமங்கள் குறையும். எதிரிகள் உங்களை அவமானப்படுத்தும் நோக்கத்துடன் இருப்பர். உங்கள் புத்திசாலித்தனமான செயல்கள் அவற்றை தகுந்த சமயத்தில் முறியடிக்கும். கணவன், மனைவி ஒற்றுமையில் பிரச்சினை ஏற்படும். எனவே ஒருவர் கருத்தை மற்றவர் மதித்து நடப்பதால் நன்மை உண்டாகும்.

நண்பர்கள் நட்பை பலப்படுத்தும் வகையில் நடந்துகொள்வர். ஆரோக்கிய உடல்நலம் பெற குருவருள் பலமாக உள்ளது என்றாலும் கண்டம், விபத்து என்றெல்லாம் அதிகரித்துவிட்ட இக் காலத்தில் நீங்கள் சற்று கவனமாக இருப்பது நல்லது. தெய்வ நம்பிக்கை அதிகம் வேண்டும். தந்தைவழி உறவினர்கள் உங்களிடம் எதையாவது எதிர்பார்ப்பார்கள். உங்களால் இயன்ற உதவி செய்யுங்கள். சுக, சவுகர்ய வாழ்க்கை வசதியை குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படும். தொழில் சார்ந்த வகையில் கடந்தகால வளர்ச்சியை அதிகப்படுத்தும் விதமாக முனைப்புடன் செயல்படுவீர்கள். பணச் சேமிப்பு திருப்திகர மாகஇருக்கும். குடும்பத்தில் சுபமங்கல நிகழ்வு எதிர்பார்த்த வகையில் நடைபெறும். வெளியூர் பயணம் செல்லும் சமயத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனமுடன் பின்பற்ற வேண்டும்.

*குரு வக்ரகால பலன்*

*5.04.07முதல் 27.08.07வரை*

ராசிநாதன் சூரியனுக்கு நட்பு கிரகமான குருபகவான் செவ்வாயின் வீடான விருச்சிகத்தில் அமர்ந்து வக்ரமாகிறார். இதனால் மனதில் உற்சாகக்குறைவு ஏற்பட்டு சரியாகும். உங்களை அவமானப்படுத்தியவர்கள் சிரமப்படும் நிலைமை பெறுவர். வருமானம்பெற வழக்கத்தைவிட கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். உறவினர்கள் ஆறுதல் தரும் விதமாக நடந்துகொள்வர். வாகன பிரயாணத்தில் கூடுதல் கவனம் தேவை. புத்திரர்கள் விளையாட்டுத்தனமாக நடந்து உங்கள் பொறுமையை சோதிப்பர். ஆனால் வக்ர காலத்தில் கணவன், மனைவி ஒற்றுமை பலப்படும். தொழில் வியாபாரத்தில் தனிக்கவனம் செலுத்தி வளர்ச்சி பெறுவீர்கள். கடந்தகால சேமிப்பின் பயனை உணர்ந்து மகிழ்வீர்கள்.

*தொழிலதிபர்கள்:-* கம்யூட்டர், செல்போன், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், பாத்திரங்கள், பர்னிச்சர் தயாரிப்பாளர்கள், பால் பண்ணை அதிபர்கள், பிளாஸ்டிக் பொருள்கள், தண்ணீர் சார்ந்த பொருள் உற்பத்தியாளர்கள், கல்வி நிறுவனங்கள் நடத்துபவர்கள், ஆட்டோமொபைல் உதிரிப்பாகம் தயார் செய்பவர்கள் தொழிலில் அபரிமிதமான வளர்ச்சிபெற்று பொருளாதார ஏற்றம் காண்பார்கள். மற்றவர்களுக்கு சுமாரான நிலையே இருக்கும். புதிய பதவி கிடைக்கும். வீடு, மன்னை, வாகன வசதிகள் அபிவிருத்தியாகும். பூர்வ சொத்துக்களை கூடுதல் கவனத்துடன் பாதுகாக்கவும். எதிரிகள் விலகிப் போவார்கள். வெளியூர் வியாபாரத் தொடர்பு புதிய ஆர்டர்களைப் பெற்றுத்தரும்.

*பணியாளர்கள்:-* அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் கவனமாக செயல்பட்டு நற்பெயரும், விரும்பும் சலுகையும் பெறுவார்கள். சக பணியாளர்கள் அன்பு பாராட்டி செயல்படுவார்கள். குறிப்பாக கம்யூட்டர் தொழில் நுட்பம், ஆட்டோமொபைல் சார்ந்த பணிகள், இயந்திரங்கள் இயக்குதல் போன்ற பணிகளில் உள்ளவர்கள் பணி உயர்வு பெறுவார்கள்.

*வியாபாரிகள்:-* பால்பொருள், ஐஸ்கிறீம், பேக்கரி, தோல், காலணி, கட்டடப் பொருட்கள், கம்பியூட்டர், மொபைல், எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள், எலக்ரிக்கல், மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள், ஸ்டேஷனரி, உடற்பயிற்சி கருவிகள், தேன் வியாபாரம் செய்பவர்கள் அதிக விற்பனையால் கூடுதல் பணவரவு காண்பார்கள். மற்றவர்களுக்கும் பாதகமில்லை. மூலதனத்தை அதிகப்படுத்தி புதிய கிளை துவங்கும் வாய்ப்பு உண்டாகும். தொழில் போட்டியை சமாளிப்பீர்கள். பணியாளர்களை ஊக்கப் படுத்துவீர்கள். கடையில் பொருள் பாதுகாப்பை அதிகரிப்பது நன்மை தரும். வெளியூர் வியாபாரத் தொடர்பு வளர்ச்சி பெறும்.

*மாணவர்கள்:-* ஆசிரியர் பயிற்சி, தகவல் தொழில்நுட்பம், அரசநிர்வாகம், மருத்துவம், வங்கி நிர்வாகம், பங்குச்சந்தை, தணிக்கையியல், வணிகவியல், இன்ஜினியரிங், ஆட்டோமொபைல் தொழில்நுட்பம், இசை, பரத நாட்டியம், வாய்ப்பாட்டு, வேத சாஸ்திர பயிற்சி, சுற்றுலா வழிகாட்டி பயிற்சி, உணவுப்பொருள் தயாரிப்பு, ஓவியம் வரைதல், சிற்பவடிவமைப்பு, இலக்கியம், சினிமாத்துறை, ஒட்டல் மேனேஜ்மென்ட் பயிற்சி பெறும் மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்கிப் புதிய சாதனையும் உடனடி வேலை வாய்ப்பும் பெறுவார்கள். படிப்புக்குத் தேவையான பணவசதி சரளமாக கிடைக்கும். மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். நண்பர்களால் உதவி உண்டு. ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தந்தையிடம் நற்பெயர் பெற கூடுதல் முயற்சி வேண்டும். கல்விச் சுற்றுலா வாய்ப்பு கிட்டி மனதை மகிழ்விக்கும்.

*பெண்கள்:-* அரசு மற்றும் தனியார்துறை அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் பணி இலக்கை பூர்த்திசெய்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவார்கள். விரும்பிய இடமாற்றமும் பணி உயர்வும் கிடைக்கும். சக பணியாளர்கள் உதவிகரமாக நடந்துகொள்வர். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் முக்கிய தேவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படுவர். கணவருடன் வாக்குவாதம் தவிர்ப்பதால் நன்மை உண்டு. மாங்கல்ய பலம் குருவருள் பார்வையால் சிறப்பாக உள்ளது. சுயதொழில், கூட்டுத்தொழில் புரியும் பெண்கள் தங்கள் சிறப்பான உழைப்பாலும் சக பங்குதாரர்களின் ஒத்துழைப்பாலும் தொழிலில் சாதனை நிகழ்த் துவர் ஆடை ஆப ரண சேர்க்கை

**ஜோதிட மாமணி சங்கர்ஜி**

உண்டு.

*அரசியல்வாதிகள்:-* நீங்கள் துவங்கும் ஒவ்வொரு பணியிலும் ஆன்மிக பலம் துணை நின்று பெற்றிபெற வைக்கும். பேசும் வார்த்தையில் இனிமை சேர்த்துக்கொள்வதால் அதிகாரிகளிடம் வைக்கும் கோரிக்கைகள் எளிதில் நிறைவேறும். ஆதரவாளர்கள் உங்கள் மீது கூடுதல் நம்பிக்கை கொள்ளும் விதமாக சந்தர்ப்பங்கள் உருவாகும். வீடு, மனை, வாகன வகையில் மனமகிழ்வுபெறும். வளர்ச்சிப் பணிகள் நிறைவேறும். புத்திரரை அரசியலில் வளர்க்க நினைப்பவர்கள் அதிக பணச் செலவை எதிர்நோக்க வேண்டியிருக்கும். எதிரிகள் உங்களின் சாதுர்ய நடவடிக்கையால் விலகிப்போவார்கள். அரசியலுடன் தொழில்நடத்தும் வாய்ப்பு பெற்றவர்கள் கூடுதல் உப தொழில் துவங்கி முன்னேற்றம் பெறுவர்கள்.

*விவசாயிக்ள்:-* கரும்பு, வாழை, முள்ளங்கி புடலை, பூசணி, எலுமிச்சை, கொய்யா, மா, புளி, கத்தரி, கீரை மற்றும் தானிய வகை சாகுபடி செய்பவர்கள் அதிக மகசூலும் கூடுதல் பண வரவும் பெறுவார்கள். கால்நடைகளால் அதிக வருமானம் உண்டு. வாய்க்கால் வரப்பு பிரச்சினையில் சமரசமும். பொறுமையுமே உதவும்.

*பரிகாரம்:-* பார்வதிதேவியை வழிபடுவதால் புதிய வளர்ச்சி திட்டங்கள் முழுமையான வெற்றிதரும்.

# முகமாலையில் கைதான சிப்பாயுடன் அவரது தந்தையார் சந்தித்துப் பேச்சு

(கிளிநொச்சி)

முகமாலை மோதலில் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்ட இராணுவத்தைச் சேர்ந்த சமந்த வீரசிங்கவை அவரது தந்தையார் சந்தித்துப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் அனுசரணையுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இச் சந்திப்பு நடந்துள்ளது.

ஒக்டோபர் 11 ஆம் திகதி நடைபெற்ற முகமாலைச் சமரில் சமந்த வீரசிங்க கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சமந்த வீரசிங்கவை சந்தித்த அவரது தந்தையார் வவுனியாவிலிருந்து ஓமந்தையூடாக அழைத்து வரப்பட்டார் என்றும் அதன் பின்னர் திங்கட் கிழமைஅவர் கொழும்புக்கு திரும்பினார் என்றும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

# மழை நீர் ஓட முடியாமல் வீதிகளில் நிரம்பும் வெள்ளம்

குடாநாட்டில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால் யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பல வீதிகளில் நீர் ஓட முடியாமல் தேங்கி நிற்பதால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளது.

இந் நீரினை பிரதான வீதிகள் வழியாகவே வடிகாலுக்கு அனுப்ப முடியும். ஆனால் இவ்வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினது பராமரிப்பின் கீழ் உள்ளதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி அதற்கான தீர்வைக் காணவுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இவ்விதம் வீதிகளில் நீர் தேங்கியுள்ளதால் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியாத நிலையில் பாதசாரிகளும் வாகனப் பயணிகளும் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்த அவர்,

இந்நீர் செல்வதற்கான வடிகால்களில் ஏற்கனவே 90 வீதமானவை மாநகர சபையால் சீர் செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையவைகளை திருத்துவதில் பாதுகாப்புத் தொடர்பாக சில சிக்கல்கள் ஏற்பட்ட போதிலும் அவற்றை ஓரளவுக்கு சீர் செய்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (எ-133)



யாழ்.நகரின் பிரபல வெதுப்பகம் ஒன்றில் பாணைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் கொட்டும் மழையிலும் வரிசையில் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்:-திலீபன்பன்)

# அழைப்புக்கட்டளை

## (இல.16-பிரிவு 55(1))

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

சத்தியரூபன் பெண் தயாநிதி
குறுக்கு றோட்,
நீர்வேலி வடக்கு.

வழக்கு இல: ம.நீ/725 — வழக்காளி

எதிர்

சத்தியோஜாதசர்மா சத்தியரூபன்
நீர்வேலி மத்தி, நீர்வேலி,
தற்போது முகவரி தெரியாது.

எதிராளி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி வன்ம உறவறுப்பு என்ற அடிப்படையில் 1996.08.31 ஆம் திகதியில் நடைபெற்ற பதிவுத்திருமணத்தை இரத்துச் செய்யக் கோரி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 20ந் நாள் அன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதி அன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலேயே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்

பதிவு பெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரி ஒன்றை கூறும் விபரக்குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

வரைவு

**லிங்கா துரைராஜா**
வழக்காளியின் சட்டத்தரணி

**து. சிறீமோகன்**
பதிவாளர்

குறிப்பு:- விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்கு தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும், 80ஆம் [illegible]வின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து.சிறீமோகன்**
கையொப்பம்
பதிவாளர்

2006ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 23ஆந் நாளாகிய இன்று.

(482)

கூட்டு என்பது குலைத்து வைக்கப்பட்ட வர்ணச் சுண்ணம். அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம்-கோரமான குரங்கின் உருவையும் எழுதலாம். -அறிஞர் அண்ணா

வலம்புரி

## கூட்டுச் சேர்ந்தாச்சு கும்மாளம் போடாவிட்டால் போதும்

இலங்கை அரசியல் வரலாற்றில் யாருமே எதிர்பார்க்காத நிகழ்வு அரங்கேறியுள்ளது.

ஆம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் பொது இணக்கப்பாட்டிற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

அதிசயம் ஆனால் உண்மை என்று கூறத்தக்க விடயமாகவே இரு கட்சிகளினதும் உடன்படிக்கையைக் கூறிகொள்ளலாம்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவிருந்தபோது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக விருந்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி ஆசனத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற ஆட்சிக் கதிரையிலும் அமர்ந்திருந்த காலம் அது.

அப்போது கூட ஓர் பொது இணக்கப்பாடு ஏற்படவில்லை. விடுதலைப்புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பேச்சுவார்த்தை நடத்தியபோது அது பற்றிய விபரங்களை தனக்குத் தெரியப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு சந்திரிகா குமாரதுங்கவினால் முன்வைக்கப்பட்டிருந்தது.

கூடவே ஜனாதிபதியின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையும் சந்திரிகா குமாரதுங்கவினால் விடப்பட்டது.

எனினும் அதனைப் பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் ஆத்திரமடைந்த சந்திரிகா அம்மையார் தன்னிடம் இருக்கக் கூடிய அதிகார நாகாஸ்திரத்தை எடுத்து விட்டார்.

அவ்வளவுதான்; ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற ஆட்சி கவிழ்ந்தது. ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கூறுபோடுகிறார், அதனை அனுமதிக்க முடியாது. அதனால்தான் பாராளுமன்றத்தை கலைத்தேன் என்றவாறு பாராளுமன்றக் கலைப்பிற்கு தனது நியாயத்தை கூறிய சந்திரிகா அம்மையார், சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முடிபு கட்டினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்தபோது ஏற்படாத புரிந்துணர்வு தற்போது ஏற்பட்டுள்ளது எனில் அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே காரணம் ஏனலாம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டுச் சேர வேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்ற கருத்தை இரு தலைவர்களிடமும் இந்தியா அழுத்தம் திருத்தமாக தெளிவுபடுத்தியிருந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இரண்டு பிரதான கட்சிகளும் இணைய வேண்டும் என்ற உள்நோக்கத்தில் இந்தியாவின் அழுத்தம் அவ்வாறு இருந்தது.

அதேநேரம் இரண்டு கட்சித் தலைமைகளும் ஒன்று சேரவேண்டிய தேவைப்பாடும் இருந்ததை மறுப்பதற்கில்லை.

அதாவது ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய ஆகியவற்றின் ஆதரவில் தனது ஆட்சி நீடிப்பது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல என்பதனால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேருவது நல்லது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிபு செய்தார்.

அதேபோல் கட்சி தாவும் உறுப்பினர்கள் ஒரு புறம்; தனது தலைமைக்கு எதிராக கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சதித்திட்டம் மறுபுறம் என இருக்கையில் இவற்றை எல்லாம் உடனடியாக தகர்க்க வேண்டும் எனில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்வதே ஒரே வழியென ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்தார்.

இவற்றின் அடிப்படையில் இருகட்சிகளும் கூட்டுச் சேர்ந்துள்ளன. கூட்டு நல்லது. கும்மாளம் போட்டு எல்லாவற்றையும் குழப்பாமல் இருந்தால் அதுபோதும்.

# பேச்சுவார்த்தையின் வெற்றியிலேயே ஏ-9பாதையின் திறப்பு தங்கியுள்ளது

## பாலித கோஹன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் இடம் பெறும் சமாதானப் பேச்சுவார்த்தையின்போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்து பேச அரசாங்கம் எதிர்பார்கின்றது என்று அரச சமாதானச் செயலகத்தின் செயலாளர் பாலித கோஹன்ன தெரிவித்தார்.

எதிர்வரும் ஜெனீவாப் பேச்சுவார்த்தையின்போது என்ன விடயங்கள் கலந்துரையாடப்படும்? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது; பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு உள்ளது. அந்த உயரிய நம்பிக்கையிலேயே அரசாங்கம் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்கிறது.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரசாங்கத் தூதுக் குழுவினரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்தித்துப் பேசும்போது பல ஆலோசனைகளை வழங்கினார். பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும்போது அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி விரிவாக விளக்கமளித்தார்.

இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாகவிருக்கின்றது. நாட்டின் சிறுபான்மையினத்தவரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இதனால் முதற்கட்ட பேச்சுவார்த்தையின் போதே இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பில் அவதானம் செலுத்த எதிர்பார்க்கின்றோம்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையின் வெற்றியிலேயே ஏ-9 வீதியின் திறப்பு தங்கியுள்ளது. ஏ-9 வீதி மூடப்பட்டுள்ளமையினால் யாழ்ப்பாணத்துக்கான அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பி வைப்பதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார். (எ-5)

# பாணைப் பெற்றுக் கொள்வதற்கு அலைந்து திரியும் பரிதாப நிலை

(யாழ்ப்பாணம்)

தேவைக்கேற்ற பாணைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காலை 5 மணிக்கு ஒவ்வொரு கடைகளுக்கும் பாணைத் தேடி அலையும் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்பொழுது அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மா, உப உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் காலை உணவாக சகல மக்களும் பாணையே நம்பியுள்ளனர்.

இதைவிட சில மக்கள் மூன்று வேளையிலும் பாணையே உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பாணைப் பெற்றுக் கொள்ள முடியாமையினால் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிப்பதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

காலை உணவு கொடுத்துப் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதற்காக கொட்டும் மழையில் வரிசையில் நின்று பாணைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு யாழ்.மக்கள் தள்ளப்பட்டுள்ளதாக அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காலை உணவு உட்கொள்ளாது பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் சோர்வுற்ற நிலையில்- கல்வியைத் தொடர முடியாத நிலையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை பாண் உற்பத்திக்குத் தேவையான உப மூலப் பொருள்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் அவை ஒரு மாத காலப் பாண் உற்பத்திக்குப் பயன்படுத்த முடியும் என யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

சுமுகமான சூழ்நிலையில் வாரம் ஒன்றுக்கு தமது அங்கத்துவ வெதுப்பகங்களில் ஆயிரம் மூட்டை மாவில் பாண் மற்றும் பனிஸ் போன்றன உற்பத்தி செய்யப்பட்டு வந்துள்ளதாகவும்,

தற்போதைய சூழ்நிலையில் சுமாராக மூவாயிரத்து 200 மூடை மாவினை பாண் உற்பத்திக்கு மட்டும் விநியோகித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது. (ச-133)

# இந்திய இராணுவ அதிகாரிகள் இராணுவத் தளபதியுடன் பேச்சு

(கொழும்பு)

இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை இந்திய இராணுவப் பயிற்சித் துறை இயக்குநர் மேஜர் ஜெனரல் வி.கே. அலுவாலியா நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இந்திய இராணுவ அதிகாரிகளான



கேணல் பங்கஜ் சக்சேனா, லெப்.கேணல் எஸ்.சி.ராணா ஆகியோரும் இச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இரு நாடுகளின் பாதுகாப்புத். தொடர்பிலான விடயங்களை சரத் பொன்சேகா மற்றும் இந்திய இராணுவ இராஜதந்திரிகள் விவாதித்தனர் என இராணுவச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

# காணாமல் போனோர் தொடர்பான விபரங்கள் ஐ.நாவுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகள் சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்புப் போன்ற சர்வதேச நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக காணாமல் போனோரைத் தேடி அறியும் குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தமிழ் மக்கள்அதிகளவில் காணாமல் போதல், அநாவசிய கைது செய்யப்படல் என்பன இடம்பெறுவதாக அந்தக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கடவத்தைப் பிரதேசத்தில் வெடிபொருள் மீட்கப்பட்டதையடுத்து அதிகளவான தமிழர்கள் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும்அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான மனித உரிமைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு மக்களுடன் இணைந்து பாரிய போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் காணாமல் போனோரை தேடி அறியும் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் காணாமல் போதல் தொடர்பாக முறைப்பாடுகள் இருப்பின் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அந்தக் குழு கோரியுள்ளது. (ச-9)

# சடலங்களை ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கை

(காலி)

காலித் துறைமுகத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட எட்டுப் பேரின் சடலங்களைப் பொறுப்பேற்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேச குழு ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வேண்டுகோளுக்கு விடுதலைப்புலிகளிடமிருந்து இதுவரை பதில்கிடைக்கவில்லை என்று தென்பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த கமகே தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் பதில் செஞ்சிலுவைச் சங்கத்திடம் இருந்து கிடைக்காவிடில் சடலங்களைப் புதைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-9)

# கட்டடப் பொருள் தட்டுப்பாட்டினால் அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

2007 ஆம் ஆண்டுக்கு பிரமாண அடிப்படையில் யாழ். மாநகர சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து லட்சம் ரூபா நிதி நாவாந்துறை, கொட்டடி ஆகிய இரு சந்தைகளின் திருத்த வேலைகளுக்குசமமாக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது கட்டடப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக இவ்வேலைத் திட்டத்தினை மேற்கொள்ள முடியுமா? என்பது கேள்விக்குறியாகவுள்ளதாகவும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.சரவணபவ கவலை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட செங்குந்தா பொதுச் சந்தையின் இரண்டாம் கட்டடத் தொகுதி வேலைகளும் இதேபிரச்சினை காரணமாகவே முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தற்போதைய சூழ்நிலை நீடிக்குமாயின் அபிவிருத்தி வேலைகள் எதனையும் முன்னெடுக்க முடியாது எனவும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (கு-133)

# வடமராட்சியில் நேற்று கிளைமோர் தாக்குதல்கள்

வடமராட்சியில் நேற்று நடத்தப்பட்ட இரு கிளைமோர் தாக்குதல்களில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நவிண்டில் உடுப்பிட்டி வதிரி வீதியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு முதலாவது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை மந்திகை மருத்துவனைக்கு முதலில் கொண்டு செல்லப்பட்ட அவர் அதன் பின்னர் பலாலி இராணுவ மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டார்.

வல்வெட்டித்துறை கடற்கரை வீதியில் அத்தியடிக் கோவில் அருகே காலை 9 மணியளவில் இரண்டாவது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதலையடுத்து வடமராட்சிப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (எ-101,133)

# சமாதான நடவடிக்கைகளுக்காக அனைத்தையும் அர்ப்பணிக்க முடியாது

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானத்திற்காக அனைத்தையும் அர்ப்பணிக்க முடியாது என பிரதமர் ரட்ண சிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை நடைபெறும் காலத்தில் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டால் பதில் தாக்குதல் நடாத்தப்படும் என அவர் கூறினார்.

அக்காலப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

தம்மைத் தாக்குபவர்கள் மீது பதில் தாக்குதல் நடாத்தும் உரிமை இராணுவத்திற்குள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொரணையில் நடந்த வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் தாக்குதல்கள் அதிகரிக்குமே தவிர முடிபுக்கு கொண்டு வரப்பட மாட்டாது என அவர் கூறியுள்ளார். (எ)

# அரச குழுவினரும் இன்று பயணம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சில் கலந்து கொள்ளும் அரச தரப்புப் பிரதிநிதிகளும் இன்று அதிகாலை ஜெனீவா புறப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழு புறப்பட்ட சிறிது நேரத்தில் அவர்கள் புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் நிமால் சிறி பூால டி சில்வா தலைமையில் செல்லும் அரச குழுவில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, றோகித போகல்லாகம, பேரியல் அஷ்ரப், மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் ஹப்ரால், சட்டத்தரணிகளான கோவிந் தயாசிறி, எஸ்.சி. டி.சில்வா மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோரும் பயணிக்கவுள்ளனர்.

இவர்களின் ஒரு குழு அதிகாலை ஜெனீவா நோக்கிப் புறப்பட்டதாகவும் மற்றைய குழு இன்று காலை புறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான சமாதான பேச்சுக்கள் எதிர்வரும் 28,29 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வடக்கு கிழக்கிற்கு செல்வது மிகவும் ஆபத்தானது!

## அமெரிக்கா தெரிவிப்பு

இலங்கையில் மோதல்கள் இடம் பெறும் இடங்களுக்கு செல்லவேண்டாம் என்று அமெரிக்கா இலங்கையில் உள்ள தனது பிரஜைகளை கேட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்கு பயணம் செய்வது ஆபத்தானது என அமெரிக்க இராஜாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உட்பட சில பிரதேசங்களில் இடம் பெறும் அரசியல் கொலைகள் அதிகரித்துள்ளமையானது இந்த ஆபத்தை அதிகரித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலியா, பிரான்ஸ் பிரிட்டன் மற்றும் கனடா முதலான நாடுகளும் தனது பிரஜைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பயண எச்சரிக்கையை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

# தமிழர் தாயகப் பிரதேசத்தில்...

அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 18 வருடங்களாக இணைக்கப்பட்டிருந்த தமிழர்களின் மரபுவழித்தாயகமான வடக்கு -கிழக்கு மாகாணங்கள், கடந்த 16.10.2006 அன்று வெளியிடப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்தப்பட்டு வந்த தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கைகளில் முக்கியமான விடயம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக கடந்த 30 ஆண்டுகளாக நடைபெறும் ஆயுதப்போருக்கு அமைதி வழியில் தீர்வுகாண்பதற்காக நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையின் அடிப்படை அத்திபாரமே தகர்க்கப்பட்டுள்ளது.

பிரிக்கப்பட்ட வடக்கு கிழக்கை உரிய முறையில் உடனடியாக மீண்டும் இணைக்க வேண்டும் எனக்கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும், சர்வதேச அழுத்தத்தினை அரசின் மீது ஏற்படுத்தும் வகையிலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பிரதேசத்தில் பூரண கதவடைப்புப் போராட்டத்திற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அழைப்பையேற்று இன்று யாழ். குடாநாட்டில் உள்ள மக்கள், அரச உத்தியோகஸ்தர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், கடற்றொழிலாளர்கள் அனைவரும் தங்களது அலுவலகங்கள், உணவகங்கள், வர்த்தக நிலையங்கள், மருந்தகங்கள், வியாபார நடவடிக்கைகள், போக்கு வரத்துச் சேவைகள், பாடசாலைகள், உயர் கல்வி நிலையங்கள் அனைத்தையும் மூடி பூரண ஒத்துழைப்பு வழங்கும்படி வேண்டுகின்றோம்.

மிரட்டல்களுக்கு அஞ்சாது எமது போராட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்கும்படி வேண்டுகிறோம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


## சிறுவிளம்பரம்

**SPOKEN ENGLISH**

ஓய்வு பெற்றவரினால் வீடுகளுக்கு வந்து வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு அடிப்படையிலிருந்து இலகுவான முறையில் ஆங்கிலம் பேசக் கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு :- இல.6, மாவத்தை ஒழுங்கை, சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

T.P.4591001 (480)


# ஜெனீவாப் பேச்சில் நம்பிக்கையில்லை...

உறுதி மொழி அளித்துள்ளது. நோர்வேத்தூதுவர் எங்களை அழைத்துச் செல்கிறார்.

கொழும்பிலும் எங்களுக்கான சகல ஏற்பாடுகளும் இணைத்த லைமை நாடுகளைக் கொண்ட பிரதிநிதிகளால் செய்யப்பட்டுள்ளதாக உறுதியளிக்கப்பட்ட பின்னரே எமது பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.

நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் நிகழ்ச்சிநிரல் சரியாகத் தீர்மானிக்கப்படவில்லை. நாம் முக்கியமாக எமது மக்கள் மீது அரச பயங்கரவாதம், இனப்படுகொலைகள், பொருளாதாரத் தடைகள், போக்குவரத்துத் தடைகள் என்பவற்றை அரசு ஏற்படுத்தி பெரும் மனித அவலத்தை உருவாக்கியுள்ளார்கள்.

எமது மக்களுடைய மனிதாபிமான பிரச்சினைதான் இப்பேச்சுக்களின் முக்கியமான விடயமாக இருக்கும். மக்களுக்கான மனிதாபிமான பிரச்சினைகள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்ற அடக்கு முறைகள் தடைகள் நீக்கப்பட்டு படுகொலை நிறுத்தப்பட்டு எமது மக்களுடைய அன்றாட பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பது இப் பேச்சுக்களில் முக்கியமான விடயமாக அமையும்.

அத்துடன் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அமைதி முயற்சிகளை முன்னகர்த்திச் செல்ல சாத்தியமான சூழலை உருவாக்கும். இது தான் எமது வலியுறுத்தலாக இருக்கும் என்றார்.

பேச்சுக்களில் சிறிதளவு நம்பிக்கைகூட இல்லாமல் தான் பயணத்தை மேற்கொள்கின்றோம். சர்வதேச சமூகத்தின் அழைப்புக்கு மதிப்புக்கொடுத்து எமது தலைவர் இப்பேச்சுக்கு இணங்கியிருந்தார்.

எமது தலைவரின் அறிவுறுத்தலுக்கும் பணிப்புக்கும் அமையத் தான் இப் பேச்சுக்கு செல்கின்றோம். எங்களுடைய நிலைப்பாட்டை பேச்சுக்களில் ஆணித்தரமாக முன்வைப்போம்.

அரசு தீர்வைத் தரும்; மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நல்லெண்ணவெளிப்பாட்டைக் காட்டும் என்பதில் துளிகூட நம்பிக்கையில்லை.

சர்வதேச சமூகத்தினுடைய அழைப்பையேற்றுத்தான் பேச்சுக்குச் செல்கின்றோம். பேச்சுக்களை நிறைவு செய்துகொண்டு அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வே நாட்டுக்கும் சென்று அங்குள்ள உயர் மட்டத் தலைவர்களைச் சந்தித்து எமது தாயகத்தின் நிலைப்பாட்டை விரிவாக எடுத்து விளக்க வுள்ளோம் என தமிழ்ச்செல்வன் மேலும் கூறினார். (எ-1)

# சு.கட்சி...

இரு பெரிய கட்சிகளுக்கும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண ஒருங்கிணைந்திருப்பது வரவேற்கத்தக்கது என்றார்.

இணைத் தலைமை நாடுகளில் பங்கேற்றிருக்கக்கூடிய நோர்வேத் தரப்பினரும் அமைதிமுயற்சியை உருவாக்குதற்கான இந்த முயற்சியை வரவேற்பதாக கூறியுள்ளனர்.

இலங்கைக்கான நோர்வேத் தூதரகப் பேச்சாளர் எரிக் நுயெரென் பர்க் இதனைத் தெரிவித்தார். இதே வேளை இரு பிரதான கட்சிகளிடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சில அரசியல் கட்சிகள் வரவேற்றுள்ளன. (ச-1)

# 18 ஆயிரம்...

களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காகவே விமானம் மூலம் எடுத்துவரப்பட்டதாகவும் மேலும் 7 ஆயிரம் கிலோ பொருட்கள் எடுத்துவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது மழை காலம் தொடங்கியுள்ளதால் இப் பொருட்களை விமானம் மூலம் கொண்டு வந்தாக கூறப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு என்றுமில்லாதவாறு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# விடுதலைப்புலிகளின் பேச்சுக்குழுவினர்...

கொப்டர் கிளிநொச்சியைச் சென்றடைந்தது.

அங்கிருந்து காலை 10 மணியளவில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் ஹெலிகொப்டர் புறப்பட்டது.

அக் குழுவில் அரசியல்துறைப் பொறுப்பாளருடன் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், இராணுவப் பேச்சாளர் இளந்திரையன், தமிழீழ மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஆகியோர் சென்றனர்.

நேற்று மதியம் கட்டுநாயக்கா வைச் சென்றடைந்த அவர்கள் அங்கு விசேடமாக ஒதுக்கப்பட்ட இடம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டனர்.

இவர்களின் வருகையை அடுத்து விமான நிலையத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந் நிலையில் அவர்கள் இன்று அதிகாலைடுபாய் ஊடாக ஜெனீவா புறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் பேச்சுக் குழுவினருடன் நோர்வே பிரதிநிதிகளும் சென்றதாக கூறப்பட்டது. (சு-5,9)

# ஒப்பந்தத்தை...

அவ் உயர் மட்டக்குழுவில் இரு கட்சிகளில் இருந்தும் நால்வர் வீதம் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இக் குழுவினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவர் என தெரிவிக்கப்பட்டது. (ச)

# ஊடக சுதந்திர தரப்படுத்தலில்...

பெற்றுள்ளன.

பின்லாந்து, அயர்லாந்து, நெதர் லாந்து, ஐஸ்லாந்து, செக்குடியரசு ஆகிய நாடுகளே ஊடக சுதந்திரம் மிக்க நாடுகளாகும்.

ஊடக சுதந்திரம் மிகவும் மதிக்கப்படுகின்ற நாடுகளில் அனேக மானவை ஸ்கண்டிநேவிய நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட அந்த நாடுகளில் ஊடகத்துறை மீது அச்சுறுத்தல் விடுக்கப்படவோ மற்றும் எந்த வொரு ஊடகவியலாளர்களை தாக்கிய சம்பவங்களோ இடம்பெறவில்லை.

ஆசிய வலயத்தில் தென்கொரியா முதலிடம் பெற்றுள்ளது. தெற்காசியாவில் இந்தியா 105 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

2002 ஆம் ஆண்டு அறிக்கைகளுக்கு ஏற்ப 51 ஆவது இடத்தில் இருந்த இலங்கை இம் முறை 141 ஆவது இடத்திற்கு பின்னோக்கிச் சென்றுள்ளது.

யுத்தம் சுதந்திர ஊடகத்திற்கு அச்சுறுத்தல் விடுப்பதாக அந்த அமைப்பின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழ் ஊடக வியலாளர்களின் சுதந்திரம் குறித்தும் அந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளது. தென்கொரியா இறுதி இடத்தை பெற்றுள்ளது. (ச)


## பதவி வெற்றிடம்

1. பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்- இரவுக்கடமை)
2. பத்திரிகை விநியோகஸ்தர்கள் (ஆண்கள்-)

வலம்புரி நிறுவனத்திற்கு 6 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களாகவும், பத்திரிகை விநியோகிப்பவர்கள் சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களாகவும், சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

இல.03, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

ஆளணி முகாமையாளர்,
வலம்புரி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.